ரூ.744.6 கோடி அடையாறு நதிக்காக ஒதுக்கீடு! கூவம் நதியை மீட்டெடுக்கும் முயற்சிக்கு மீண்டும் புத்துயிர்!

சென்னை நதிகளை மீட்டுருவாக்கம் செய்யும் 'திராவிட மாடல்' அரசு!

'ஒன் ரிவர், ஒன் ஆபரேட்டர்' திட்டத்தின் கீழ் புதிய நிறுவனம் தொடங்க திட்டம்!

சென்னை, நவ. 19-

சென்னை நகருக்குள் பாயும் சமூக-சூழலியல் முக்கியத்துவம் வாய்ந்த நதிகளை மறுசீரமைக்க தமிழ்நாடு அரசு பல்வேறு முனைப்புகளை மேற்கொண்டுள்ளன. சென்னை நதிகள் மறுசீரமைப்பு அறக்கட்டளையை உருவாக்கி, அந்த அறக்கட்டளையின்கீழ் சென்னை நதிகள் மறுசீரமைப்புத் திட்டம் உருவாக்கப்பட்டு மீட்டுருவாக்கும் பணிகள் வேகம் எடுத்துள்ளன.

சென்னையில் ஓடும் கூவம் ஆற்றில் 1940-கள் வரையிலும்கூட தெளிந்த நல்ல நீர் ஓடியது. சென்னையின் அபரிமிதமான வளர்ச்சி ஒரு ஆற்றை கழிவுநீர் கால்வாயாக மாற்றிவிட்டது. இன்று கூவம் என்றால் ஆறு என்பது மறந்து துர்நாற்றம் நிறைந்த கழிவுநீர் கால்வாய்க்கு உதாரணமாகவும் திகழ்கிறது. அவ்வப்போது, கூவம் நதியை மீட்டெடுக்கும் முயற்சியை சென்னை மாநகராட்சியும் தமிழக அரசும் மேற்கொண்டு வருகின் றன. ஆனால், கூவம் எப்போது ஒரு நதியாக மீண்டும் மீட்டு எடுக்கப்படும் என்ற எதிர்பார்ப்பு மக்கள் மத்தியில் நீண்ட நாள் கனவாகவே இருந்து வருகிறது.

கூவம் நதியை சீரமைத்து மீட்டெடுக்க, 2006-2011 திமுக ஆட்சியில் துணை முதல மைச்சராக மு.க.ஸ்டாலின் அவர்கள் இருந்த போது, சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்ட ளையுடன் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. அப்போ தைய மேயர் மா. சுப்பிரமணியன் முயற்சியில் அமெரிக்க சான் ஆண்டனியோ மாகாணத்துடன் சென்னை மாநகராட்சி நீர்நி லைகள் மீட்டெடுத்தல் தொடர்பாக சகோதர ஒப் பந்தமும் கையெழுத் தானது. பின்னர் அ.தி. மு.க. ஆட்சிக் காலத்தில் இவை அனைத்தும் கிடப்பில் போடப்பட்டன. மீண்டும் தி.மு.க. தலைமையிலான அரசு பொறுப்பேற்றதும் நதி களை சீரமைக்கும் பணிகளை மேற் கொண்டது.

குறிப்பாக, சமூக-சூழலியல் முக்கியத்துவம் வாய்ந்த நதிகளை மீட்டுருவாக்க, மறுசீர மைக்க தமிழ்நாடு அரசு சென்னை நதிகள் மறு சீரமைப்பு அறக்கட்டளையை உருவாக்கியது. கடந்த 30 ஆண்டுகளாக அடையாறு நதியில், கட்டுமானக் கழிவுகள் முதல் குடியிருப்புகள் மற்று ம் தொழிற்சாலைக் கழிவுகள் வரை பலவும் கொட்டப்பட்டு வருவதாக குற்றச்சாட்டு உள்ளது.

இந்நிலையில், நகருக்குள் பாயும் சமூக-சூழ லியல் முக் கியத்துவம் வாய்ந்த நதிகளை மறுசீ ரமைக்க தமிழ்நாடு அரசு சென்னை நதிகள் மறுசீரமைப்பு அறக்கட்டளையை உருவாக்கி யது. அந்த அறக்கட்டளையின்கீழ் சென்னை நதிகள் மறுசீரமைப்புத் திட்டம் உருவாக்கப்பட் டது. அடையாறு நதிக்காக இந்தத் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட 744.6 கோடியில், இதுவரை 7453.1 கோடி நிதி பயன்படுத்தப்பட்டுள்ளதாக 4 அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

மேலும், இந்தத் திட்டத்தின் கீழ், அடையாற் றுக் கரையோரப் பகுதிகளில் இருந்து 8,891 மில்லியன் டன் திடக்கழிவுகளையும், 3,505 மில்லியன் டன் குப்பைகளையும் கற்றியுள்ள தாக சென்னை நதிகள் மறுசீரமைப்புத் திட்டங் கள் குறித்து பசுமைத் தீர்ப்பாயத்தில் சமர்ப்பிக் கப்பட்ட அறிக்கை கூறுகிறது.

அடையாறு நதி மறுசீரமைப்புக்காகப் பயன் படுத்தப்பட்ட நிதியில் முதல்கட்டப் பணிகளில் ஒன்றாக, அடையாறு நதியின் எல்லைகளை வரையறை செய்துள்ளோம். இந்தப் பணியின் கீழ், ஆக்கிரமிப்புப் பகுதிகளில் இருந்து இது வரை 5,122 பேர் இடம் மாற்றப்பட்டுள்ளனர். கூடுதலாக, 4,367 பேரை இடம் மாற்றம் செய்ய திட்டமிட்டுள்ளோம்.

மேலும், பொதுப்பணித்துறை தகவல்களின் படி, திரு.வி.க. பாலம் முதல் கோட்டூர்புரம் பாலம் வரையிலான 2,353 மீட்டர். நீளத்திற்கும், கோட்டூர்புரம் பாலம் முதல் சைதாப்பேட்டை பாலம் வரையிலான 2,892 மீட்டர் நீளத் திற்கும் நதியில் வண்டல் மண் எடுக்கப்பட்டுள்ளது. நதியோரம் 650 மீட்டர் நீளத்திற்கு வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டப்பட் டுள்ளது.

அதோடு, ஜாஃபர் கான் பேட்டை பாலம் முதல் மணப்பாக் கம் தடுப்பணை வரை 3,334 மீட்டர் நீளத்திற்கு வண்டல் எடுக்கும் பணிக ளும் 500 மீட்டர் நீளத்திற்கு வெள்ளத் தடுப்புச் சுவர் அமைக் கும் பணிகளும் முடிக்கப்பட் டுள் ளதாக பொதுப்பணித்துறை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து சென்னை நதிகள் மறுசீரமைப்பு அறக்கட்டளை உறுப்பினர் கூறியதாவது:

நதிகள் மறுசீரமைப்பைப் பொறுத்தவரை, மிக முக்கிய மான பணி கழிவுநீர் கலப்பதைத் தடுப்பதுதான். கடலோர பாது காப்பு மண்டலத் தின் அனுமதி வாங்கி, அதற்கென குறிப்பிட்ட திட் டம் வகுத்துப் பணிகளை மேற்கொண்டு வருகி றோம். ஆனால், மே, ஜூன், ஜூலை ஆகிய மாதங்களில் மட்டுமே முகத்துவாரப் பணிகளை மேற் கொள்ள அனுமதி வழங்கப்படுகி றது. பங் குனி மாதத்தில் ஆமை முட்டையிடும் காலம் உள்பட பல் வேறு காரணங்களுக்காக மற்ற காலங்களில் அனுமதி வழங்கப்படுவதில்லை. இந்த 3 மாதங்களில் என்ன செய்ய முடியுமோ அதைச் செய்துள்ளோம். தற்போது வட கிழக்குப் பருவமழையின்போது ஆற்றில் நீரோட்டம் எப் படி இருக்கிறது என்ற விஷயங்களை ஆய்வு செய்து, தரவுகளைச் சேகரித்த பிறகு, அடுத்த கட் டப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

இந்தப் புதிய திட்டத்தின்கீழ், அடையாறு நதி யின் தொடக்கம் முதல் முகத்துவாரம் வரை, பல்வேறு இடங்களில் கால்வாய்கள் அமைத்து கழிவுநீரை சுத்திகரிப்பு நிலையங்களுக்குக் கொண்டு வரத் திட்டமிடப்பட்டுள்ளது. பிறகு அங்கு சுத்திகரிக்கப்பட்ட பின்னரே, அந்த நீர் ஆற்றில் திறந்து விடப்படும்.

இப்போதுள்ள கட்டமைப்புகளில் நாளொன் றுக்கு 80-90 எம்.எல்.டி வரையிலான கழிவு நீர் சுத்திகரிக்கப்படுகிறது. ஆனால், கழிவுநீர் கால்வாய்கள் மற்றும் சுத்திகரிப்பு நிலையங்களின் பணிகள் முடிவடைந்த பிறகு, சுமார் 200 எம்.எல்.டி. வரையிலான கழிவுநீ ரைச் சுத்திகரிக்க முடியும். அடையாறு நதிக் கான இந்தப் புதிய திட்டத்தின் பணிகள் நிறைவ டையும்போது, நதிநீரின் தரம் மத்திய மாசுக்கட்டுப்பாட்டு வாரிய அளவீடுகளின்படி, "ஸ்கேல் 4" என்ற அளவில் இருக்கும். அதா வது, "அவற்றைக் குடிக்க முடியாது என்றாலும், அவற்றில் உயிர்ச்சூழல் ஆரோக்கியமாக இருக் கும் அளவுக்கு ஆற்றின் தரம் உயர்ந்திருக்கும்.

மேலும் சென்னை புறநகர்ப் பகுதிகளான, பம்மல், அனகாபுத்தூர் ஆகிய பகுதிகளில் நிலத் தடி கழிவுநீர் கால்வாய்கள் அமைத்ததன் மூலம், அங்கிருந்து ஆற்றில் கலக்கும் கழிவுநீ ரின் அளவு குறைந்துள்ளது.'

சென்னை மாநகராட்சிக்கு உள்ளேயே சில இடங்களை அடையாளம் கண்டு, மெட்ரோ நீர் வாரியத்தின் மூலமாக, கழிவுநீர் சுத்திகரிப்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 761 கோடி செலவில் அமைக்கப்பட்டிருக்கும் இந்தச் சுத்திரி கரிப்பு நிலையங்களில் சில செயல்பாட்டிற்கு வந் துவிட்டன. மேலும் சில, இந்த ஆண்டுக்குள் செயல்பாட்டிற்கு வந்துவிடும். இவற்றின் மூலம் அடையாறு நதியில் கலக்கும் கழிவு நீரின் அளவு குறைக்கப்படும். அடுத்தகட்டமாக "ஒன் ரிவர், ஒன் ஆபரேட்டர்" என்ற திட்டத்தின் கீழ், ஒரு புதிய நிறுவனம் தொடங்கப்பட்டு, நதி மறுசீ ரமைப்புக்கான அனைத்துப் பணிகளும் அதன் கீழ் மேற்கொள்ளப்படவுள்ளது என்றார்.

நன்றி : **தினகரன்**
18.11.2024

நீதிபதிகளின்

இந்துத்துவா காவிமய சிந்தனைகள்!

'தீக்கதிர்' நாளேடு படப்பிடிப்பு!

சென்னை, நவ. 19 -

நீதிபதிகளின் இந்துத் துவா காவி மய சிந்தனை கள் குறித்து 'தீக்கதிர்' நாளேடு செய்திக் கட்டுரை வெளியிட்டுள்ளது.

அது வருமாறு:-

மோடியின் கடந்த பத் தாண்டு ஆட்சிக் காலத்தில், பல உச்சநீதிமன்ற, உயர்நீ திமன்ற நீதிபதிகளின் மத்தி யில் இந்துத்துவா காவி மய சிந்தனைகள் பரவியிருப்ப தைப் பார்க்க முடிகிறது. கொல்கத்தா உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவர், ஓய்வு பெறும் நாளன்று, ஆர்எஸ் எஸ்உடனான தன் வாழ் நாள் பந்தத்தைக் கூறி, அந்த அமைப்புக்குத் தான் மிகவும் கடன்பட்டிருப்ப தாகவும் அறிவித்தார். மற்றொரு நீதிபதியான அபிஜித் கங்கோபாத் யாயா, மக்களவைத் தேர் தல் நடைபெறுவதற்கு ஒரு சில வாரங்களுக்கு முன், தன் பதவியை ராஜினாமா செய்துவிட்டு, அதன்பின் சில நாட்களிலேயே பா.ஜ.க. வேட்பாளராக நின்று வெற்றி பெற்று மக் களவைக்குத் தேர்ந்தெடுக் கப்பட்டார்.

உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி, டி.ஒய். சந்திரசூட் ஓய்வுபெறுவதையொட்டி, ஏராளமான விமர்சனங்கள் வந்துகொண்டிருக்கின்றன. இது இயற்கையேயாகும். ஏனெனில் சமீப ஆண்டுக ளில் உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக நீண்ட காலம் பணியாற் றிய ஒருவராக இவர் கரு தப்படுவதால் இவ்வாறு விமர்சனங்கள் வந்து கொண்டிருக்கின்றன. மேலும் அவர் இரண்டு ஆண்டு காலம் தலைமை நீதிபதியாக இருந்திருக்கி றார். இது கடந்த இருப தாண்டுகளில் வேறெந்த தலைமை நீதிபதியையும் விட அதிகமானதாகும்.

அரசமைப்புச்சட்டம் மற்றும் குடிமக்களின் உரி மைகளைப் பாதுகாப்பதற் காக அமைக்கப்பட்ட உச்ச நீதிமன்றத்தில் தலைமை நீதிபதி என்ற முறையில் அவர் தம் பங்கைச் சரியாக செய்திருக்கிறாரா என் பதை மதிப்பிடுவது அவசி யம். மோடி அரசாங்கம், இரண்டாவது முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர்ந்த பின்னர், அரசமைப்புச் சட் டத்தையும், குடிமக்களின் அடிப்படை உரிமைகளை யும் சீர்குலைக்கும் இந்துத் துவா நிகழ்ச்சி நிரலை நிறைவேற்ற தன் முயற்சி களை வெறித்தனமாக முன்னெடுத்துச் சென்றது.

இந்துத்துவா தொடர் பாக இரண்டு தீர்ப்புகளை நீதிபதி சந்திரசூட் வழங்கி யிருக்கிறார். அயோத்தி வழக்கில் தீர்ப்பு வழங்கிய 5 பேர் கொண்ட உச்சநீதி மன்ற நீதிபதிகளின் அமர் வாயத்தில் இருந்த அவர், பாபர் மசூதி இடிப்பு அரச மைப்புச் சட்டத்திற்கு விரோதமானது என்று கூறி யபோதிலும், அந்த இடத்தை இந்துக்களிடம் ஒப்படைத்தார். இந்தத் தீர்ப்பின் மூலமாக ஆர்எஸ் எஸ்/விசுவ இந்து பரிசத் தின் கோரிக்கை நியாயப்ப டுத்தப்பட்டது.

தலைமை நீதிபதியாக இருந்தபோது, நீதிபதி சந்தி ரசூட் வாரணாசியில் உள்ள ஞானவாபி மசூதி வழக்கில், 1991ஆம் ஆண் டின் மத வழிபாட்டுத் தலங்கள் சட்டத்தை மீறி வழக்குகளைத் தொடர அனுமதி அளித்தார். இது வாரணாசி மற்றும் மதுரா வில் சர்ச்சைகளைத் தூண் டும் உரிமத்தை இந்துத் துவா சக்திகளுக்கு வழங்கி யது.

தலைமை நீதிபதி சந்திர சூட் தலைமையிலான அமர்வாயம், 370ஆவது பிரிவை ரத்து செய்ததை உறுதிப்படுத்தியதோடு, ஜம்மு-காஷ்மீர் மாநி லத்தை யூனியன் பிரதேச மாகத் தரமிறக்கியது குறித்த முடிவை தள்ளிப் போட்டது. இது ஆர்.எஸ். எஸ்./பா.ஜ.க.வின் மற்று மொரு முக்கிய நிகழ்ச்சி நிரலை நிறைவேற்றியது.

'மாஸ்டர் ஆஃப் தி ரோஸ்டர் டுட்டிஸ்' எனப் படும் அமர்வாயங்கள் அமைப்பது மற்றும் கொலி ஜியம் செயல்பாடுகளில், குடிமை உரிமைகள் வழக் குகள் பழைமைவாத பார்வை கொண்ட நீதிபதி களிடம் அனுப்பப்பட் டன. உயர்நீதிமன்ற நீதிபதி களின் தேர்வு ஆட்சியாளர் களின் கட்டுப்பாட்டிற்கு விடப்பட்டது.

நீதிபதி சந்திரசூட் தனது பதவிக்காலத்தின் இறுதி யில், அயோத்தி வழக்கின் தீர்வுக்காக கடவுளிடம் பிரார்த்தனை செய்ததாக ஒப்புக்கொண்டார். துவா ரகா கோவிலில் காவிக் கொடியை நீதியின் கொடி யாகப் போற்றினார். இவை நீதித்துறையில் காவி மய சிந்தனைகளின் வளர்ச் சியைக் காட்டுகின்றன.

கொல்கத்தா உயர்நீதி மன்ற நீதிபதிகள் ஆர்எஸ் எஸ்உடனான தொடர்பை வெளிப்படையாக ஒப் புக்கொண்டனர். மத்தியப் பிரதேச உயர்நீதி மன்ற நீதி பதிகள் ஆர்.எஸ்.எஸ். அமைப்பை புகழ்ந்து பேசினர். கேரவன் இதழின் அறிக் கையின்படி, தற்போ தைய 33 நீதிபதிகளில் 9 பேர் (ஆர்எஸ்எஸ்சின்) அகில பாரதிய அதிவக்த பரிசத் தின் நிகழ்ச்சிகளில் பங்கேற் றுள்ளனர்.

உச்சநீதிமன்ற அளவில் வழங்கப்படும் தீர்ப்பு களிலேயே ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தின் இந்துத்துவா உணர்வுகள் பிரதிபலிப்ப தன் ஓர் எச்சரிக்கையா கவே தலைமை நீதிபதி சந் திரசூட் குறித்த பதிவுகள் புலப்படுத்துகின்றன. ஒட் டுமொத்தத்தில், இது உச்ச நீதிமன்றம் மற்றும் பல உயர்நீதிமன்றங்களில் ஆர் எஸ்எஸ் சிந்தனைகள் முன் னேறுவதற்கு மோடி அர சாங்கம் எப்படியெல்லாம் உதவியிருக்கிறது என்பதற் கான சமிஞ்கை ஆகும்.

இவ்வாறு 'தீக்கதிர்' செய்திக் கட்டுரை வெளி யாகியுள்ளது.

நன்றி : **தீக்கதிர்**
18.11.2024

கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார் அவர்களின் 88 வது நினைவு நாளை முன்னிட்டு நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் நெல்லை மாநகராட்சி அலுவலகம் எதிரில் அமைந்துள்ள வ.உ.சி. மண்டபத்தில் அமைந்துள்ள வ.உ.சிதம்பரனார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மைதீன் கான் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.நிகழ்வில் மாநில மகளிர் தொண்டரணி துணை செயலாளர் விஜிலா சத்யானந்த்,மாவட்ட அவை தலைவர் முருகன்,துணைச் செயலாளர் சுரேஷ், பொதுக்குழு உறுப்பினர்கள் சரவணன், பரமசிவ ஐயப்பன், மேலப்பாளையம் பகுதி செயலாளர் துபாய் சாகுல், இளைஞர் அணி அமைப்பாளர் கருப்பசாமி கோட்டையப்பன், துணை அமைப்பாளர் மீரான் மைதீன், நவநீதன், சுப்பையா, முகமது அலி, அனிதா, மணிகண்டன், பத்மராஜ், மேகை செல்வம், முறுக்கு சாகுல், வேல்முருகன், மாரிமுத்து, மாமன்ற உறுப்பினர்கள் உலகநாதன், டாக்டர்.சங்கர்,சுந்தர் நித்தியபாலையா,முன்னாள் மாமன்ற உறுப்பினர் பாலன், முக்கையா,நெல்லை ரவி, நெல்லை முத்தையா, ராவணன், பிரான்சிஸ், இமானுவேல், ரத்தினபாலன்,காதர் ஒலி, செல்வானந்த், தேவிகா,உத்தரநாயகம், ஜெனிபர், அருணாசலம்மாள், குண்டு பாண்டியன், நாராயணன், ஜெயக்குமார், சரவணன், ஐயப்பன் உள்பட கழகத்தினர் திரளாக கலந்து கொண்டனர்.

கப்பலோட்டிய தமிழன் வ.உ சிதம்பரனார் அவர்களின் 88 வது நினைவு நாளை முன்னிட்டு பாளையங் கோட்டை வ.உ.சி விளையாட்டு மைதானத்தில் அமைந்துள்ள வ.உ.சிதம்பரனார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. நிகழ்வில் மேயர் ராமகிருஷ்ணன், துணை மேயர் ராஜ், மண்டல தலைவர்கள் பிரான்சிஸ், மகேஸ்வரி, வழக்கறிஞர் தினேஷ், மாநகர துணைச் செயலாளர் பிரபு பாண்டியன், மாமன்ற உறுப்பினர்கள் பேச்சியம்மாள், சின்னத்தாய் கிருஷ்ணன், சுப்பிரமணியன், மாரியப்பன், அலிசேக் மன்சூர், தொ.மு.ச. அர சன் ராஜ், பகுதி துணை செயலாளர் சுபஹானி, முன்னாள் மாவட்ட உறுப்பினர் முகமது கமாலுதீன், வல்லநாடு முத்து, சுண்ணாம்பு மணி, சாமுவேல், குறிச்சி ஆனந்த், முகமது காசிம்,முபின் இஸ்மாயில், துரைப்பாண்டியன் சாய்பாபா, காசிமணி, கனி, கிருஷ்ணன், புகாரி, மகேஷ், குணா, மகேஷ் ஆதித்தன், கானாப்பட்டி அகஸ்டின் பொன்னாண்டஸ்,பாளை சதீஷ், முருகன்,சேக் பிள்ளை உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாக ராஜன் ஆகியோரின் ஆலோசனைப்படி வாக்காளர் சரிபார்ப்பு முகாம் சிம்மக்கல் பகுதி 51 வட்டக் கழகம் சார்பாக வட்டச் செயலாளர் அசோக் குமார் தலைமையில் நடைபெற்றது. இதில் தலைமைக் கழக பேச் சாளர் வி. பி.ராஜன், மாவட்ட அவைத் தலைவர் ஒச்சு பாலு, கவுன்சிலர் விஜயலட்சுமி, கண்ணன், வெள்ளத்துரை உள்ளிட்ட நிர்வாகிகள் மற்றும் பாக முகவர்கள் கலந்து கொண்டனர்.

எழும்பூர் 99வது வார்டில் வாக்காளர் சரிபார்ப்பு முகாம்!

சென்னை, நவ.19 –

அமைச்சர், சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு வழி காட்டுதலின்படி, எழும்பூர் வார்டு 99 உள்ள டங்கிய 99, 99அ ஆகிய வட்டங்களில் உள்ளடக்கிய வாக்குச்சாவடி நிலையத்தில் பாகம் எண்கள்: 3,4,6,7,8,9,109,110, 111,112, புரசைவாக் கம் சுந்தரம் தெரு சென்னை நடுநிலைப்பள்ளி மற்றும் ஈ.வி. ஆர். பெரியார் லேன் கேரளா சமாஜ் பள் ளிக்கூடத்தில் வாக்காளர் பட்டியல் திருத்தம் முகாம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் 99வது வார்டு மாநக ராட்சி மன்ற உறுப்பினர் அயலக அணி மாநில துணைச் செயலாளர் பரிதி இளம் சுருதி பாகங்களில் நேரில் சென்று பார்வை யிட்டார்,

இதில் 99வது வட்ட கழகச் செயலாளர் ஆர்.எம்.ரங்கநாதன், 99வது (அ) வட்டக் கழக செயலாளர் சி. சேகர், பகுதி கழகத் துணைச் செயலாளர்கள் பி.சி. சம்பத்கு மார், ஜே.கே. கருணாகரன், மாவட்டப் பிர திநிதிகள் டி.செபாஸ்டின், இரா. ஜெய்சங் கர், மாவட்டத் துணை அமைப்பாளர்கள், புரசை. ரவி, புரசை. பி. சதீஷ்குமார், முத்து ரவிச்சந்திரன், வட்டக் கழக நிர்வாகிகள் கே.ஆர்.முரளி, வரதராஜன், ரா.முரளி, கோமளா, ஆர்.எஸ்.வெங்கடேசன், பிஷ் மோகன், சாலை மாநகர் மாது, ஆர். கே.புரம் சுகுமார், 99வது (அ) வட்ட நிர்வா கிகள், சென்ட்ரிங் இளங்கோ, மில்க் ராஜ், ஜெய ஜான், கே.கனகா, கலைவாணி, சுகன்யா, பகுதி பிரதிநிதி ஜலேந்திர குமார், சந்தோஷ் உள்பட கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

தேனி வடக்கு மாவட்டம் தேனி நாடாளுமன்ற உறுப்பினர் வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்செல்வன் வழிகாட்டுதலின்படி போடிநாயக்கனூர் நகராட்சி 19 ஆவது பகுதி சபரிமலை தெரு மற்றும் ஒழுகால் பாதை 2 வது தெருவில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் 19 வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் எஸ். வெங்கடேஷ்குமார் சொந்தச் செலவில் மேல்நிலை நீர் தேக்கத் தொட்டியுடன் கூடிய ஆழ்துளை கிணறு அமைக்கும் பணி நடைபெற்றது. உடன் நகர்மன்றத் தலைவர் ராஜராஜேஸ்வரி சங்கர். நகராட்சி ஆணையாளர் செல்வி பார்கவி. நகராட்சி பொறியாளர் குணசேகரன் மற்றும் உதவி பொறியாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.